11th March 1963]

ஆகவே வருடம் முடிந்த பிறகுதான் முழுக் கணக்கும் தெரியும். அந்தந்த வருடக் கணக்கு அந்தந்த வருடத்திலேயே கொடுக்க முடியாது. அந்த வருடம் முடிந்த பிறகுதான் கொடுக்கப்படும். சாதாரணமாக எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்பதை மட்டிலும் சொல்லலாம். அதாவது சுமார் **865** மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

Diploma in Mining

* 186 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Central and State Governments are recognising the Diploma in Mining awarded by the Madras Government; and

(*b*) if not, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) : The Central Government have intimated recently that the diploma in Mining issued by the State Board of Technical Education in this State will not be recognised for appointments under them as practical training has not been given to the students in under-ground mining.

The question of prescribing the Mining diploma for appointment to posts in this Government is under consideration.

கண்ணாடி வளையல் செய்முறை பயிற்சிக்கூடம்

* 187 கேள்வி.—**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலத்தில் கண்ணாடி வளையல்கள் செய்ய பயிற்சிக்கூடம் நிறுவ உத்தேசமுண்டா ?

(இ) தமிழகத்தில் அம்மாதிரி பயிற்சிக்கூடங்கள் எங்கெங்கு உள்ளன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) நெடுமாரதியில் அரசினர் கண்ணாடி வளையல்கள் செய்யும் பயிற்சிக்கூடம் ஒன்று **21**-ந் தேதி பிப்ரவரி மாதம் **1957** முதல் **31**-ந் தேதி மார்ச்சு மாதம் **1961** வரை இயங்கி வந்தது. மறுபடியும் இதுபோன்ற பயிற்சிக்கூடம் ஒன்று சேலத்தில் நிறுவ இப்போது உத்தேசம் இல்லை.

(இ) தமிழகத்தில் மதுரையில் மட்டும் கண்ணாடி வளையல், மணி ஆகியவை செய்வதற்கான பயிற்சிக்கூடம் ஒன்று **25**-ந் தேதி ஜூன் மாதம் **1954** முதல் இயங்கி வருகிறது.

காஞ்சீபுரத்திலுள்ள பாலிடெக்னிக் (கட்டிட வசதி)

*188 கேள்வி—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காஞ்சீபுரம் பக்தவத்சலம் பாலிடெக்னிக் பள்ளிக்கு வேண்டிய கட்டிடமும், அப்பள்ளி மாணவர்க்கான மாணவர் விடுதியும் சொந்தத்தில் அமைந்துள்ளனவா ?

(இ) இல்லையேல், அவற்றிற்காகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் யாவை ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இன்னும் இல்லை. (இ) பக்தவத்சலம் தொழிற்க் கல்லூரிக்கான நிரந்தரக் கட்டிடங்கள் அமைப்பதற்கென காஞ்சீபுரத்திற்கு அருகாமையிலுள்ள காரப்பேட்டை கிராமத்தில் சுமார் **73** ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு மானேஜ்